# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 12 திங்கட்கிழமை 28.07.2025 கதிர் 268



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு-
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel






## நல்லூரான் கொடியேற்றம் நாளை இன்று கொடிச்சீலை கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில்,கொடியேற்றத்துக்காகச் சம்பிரதாயபூர்வமாகக் கொடிச்சீலை எடுத்து வரும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை நடைபெற்றது.

செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை சம்பிரதாயபூர்வமாக ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது பாரம்பரிய வழக்கமாகும்.

அதன்படி யாழ். சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு அருகில் உள்ள வேல் மடம் முருகன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெற்ற

7

# செம்மணிப் புதைகுழியில் இன்றும் மூன்று எலும்புக்கூடுகள் அடையாளம்

### இதுவரை 104 என்புக்கூட்டுத் தொகுதிகள் கண்டுபிடிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்ப்பாணம், செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி அகழ்வின் இரண்டாம் கட்டப் பணிகள் 23 ஆவது நாளாக இன்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போது, 3 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதன்படி, இதுவரையில் மொத்தமாக 104 என்புக்கூட்டுத் தொகுதிகள் செம்மணி - சித்துப் பாத்தி மனிதப் புதைகுழியில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, இன்று ஒரு என்புக்கூட்டுத் தொகுதி அகழ்ந் தெடுக்கப்பட்டுள்ளது.

7

## நாமலைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் பிடியாணை உத்தரவு



கொழும்பு, ஜூலை 28

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு பிடி யாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வழக்கொன்றில் அவர் நீதி மன்றத்தில்

7

## மாவை சேனாதிராஜா இல்லாத அருமை இப்போதுதான் பலருக்குப் புரிகின்றது!

### நினைவஞ்சலி நிகழ்வில் சிறீதரன் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஜூலை 28

"மாவை சேனாதிராஜாவின் வாழ்க்கை என்பது ஒரு மிகப் பெரிய சரித்திரம். எமது இனத்தைப் பொறுத்தவரை இனிமேல் இவ்வாறான ஒரு தலைவரை நாங்கள் பெற முடியாது. அவரின் எண்ணத்தில் எந்த நேரமும் இனம் பற்றிய சிந்தனை இருந்துள்ளது. யாரையுமே நோகடிக்காத ஒரு நல்ல

7

## மாவையின் 6 ஆம் மாத நினைவஞ்சலி




யாழ்ப்பாணம், ஜூலை 28

மறைந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சோ.சேனாதிராஜாவின் ஆறாவது மாத நினைவஞ்சலி நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். சங்கானை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

7

## முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த கைது!



முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்ன குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் இன்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். நிஷாந்த உலுகேதென்ன கடற்படைத் தளபதியாகக் கடமையாற்றிய காலத்தில் குருநாகல் - பொத்துஹெர பிரதேசத்தில் இளைஞர் ஒருவரைக் கடத்திக் கொலை செய்த சம்பவம் தொடர்பான விசாரணைகளின் அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் இதற்கு முன்னர் சில சந்தேகநபர்கள்

7

# காட்டு யானை சடலமாக மீட்பு



கொழும்பு, ஜூலை 28

திருகோணமலை: சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறிமங்களபுர பகுதியில், வயல்வெளியை ஒட்டிய காட்டுப் பகுதியிலிருந்து சுமார் 30 வயது மதிக்கத்தக்க காட்டு யானை ஒன்று திங்கட்கிழமை (28) அன்று உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

வன ஜீவராசிகள் திணைக்களத்தின் சேருநுவர காரியாலய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த யானையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. உயிரிழந்த யானை சுமார் இரண்டு நாட்கள் ஆகியிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மரணத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இதனை உறுதி செய்வதற்காக, யானையின் உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மேலும் தெரிவித்தனர்.

பரிசோதனையின் முடிவு களுக்குப் பின்னரே மரணத்திற்கான உண்மையான காரணம் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து சேருநுவர பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அப்பகுதியில் உள்ள மக்களிடமும் வன அதிகாரிகளிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.(ஐ)

# 360 மாணவர்களுக்கு பணப்பரிசில்கள்

கொழும்பு, ஜூலை 28

2023-2024 ஆண்டு க.பொ.த உயர் தரத்தில் பரீட்சையில் சிறப்பு சித்தியை பெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தினூடாக பணப் பரிசில்களையும் கௌரவத்தையும் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன ஞாயிற்றுக்கிழமை அன்று வழங்கி வைத்தார்.

ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர் எஸ்.சி. ரோஷன் தலைமையில் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவகத்தில் இடம் பெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் ஜயந்த லால் ரட்ணசேகர, வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு ஆகியோர் பங்கு பற்றுதலுடன் இடம் பெற்றது.

அதிமேதகு ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளை பரவலாக்கும் செயற்றிட்டத்தின் கீழ் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த மாணவ மாணவிகளுக்கு 36 மில்லியன் ரூபா நிதியிலான பணப் பரிசிக்களும் மற்றும் கௌரவம் வழங்கப்பட்டன.(ஐ)



SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# மாலைதீவில் ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பு






கொழும்பு, ஜூலை 28

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மாலைதீவுக்கான அரச விஜயத்தை ஆரம்பித்து, திங்கட்கிழமை அன்று முற்பகல் வெலானா சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தார்.

அங்கு மாலைதீவின் தேசிய பாதுகாப்புப் படையின் மரியாதைக்கு மத்தியில் ஜனாதிபதியை அந்நாட்டு ஜனாதிபதி கலாநிதி மொஹமட் முய்சு (Dr Mohamed Muizzu) வரவேற்றார்.

ஜனாதிபதியை வரவேற்கும் முகமாக மாலைதீவு வெலானா சர்வதேச விமான நிலையத்தின் விசேட விருந்தினர் வருகை முனையத்தில் சிறுமிகள் குழுவொன்று அழகிய கலாசார நடனத்தை நிகழ்த்தியதுடன், ஜனாதிபதி அந்த சிறுமிகளுடன் சிறு உரையாடலிலும் ஈடுபட்டார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை வரவேற்கும் உத்தியோகபூர்வ வைபவம் மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி மொஹமட் முய்சு (Dr Mohamed Muizzu) தலைமையில் மாலைதீவின் தலைநகரான மாலேயில் உள்ள குடியரசு சதுக்கத்தில் இன்று பிற்பகல் நடைபெறவுள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினரும் இந்த அரச விஜயத்தில் கலந்து கொண்டுள்ளனர். (ஐ)

# புதிய கல்வி சீர்திருத்தம் குறித்து பிரதமர் கருத்து




கொழும்பு, ஜூலை 28

அரசாங்கத்தின் கல்வி சீர்திருத்தம் என்பது புதிய பாடப்புத்தகத்தை அறிமுகப்படுத்துவது மட்டுமல்ல, மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீதான அழுத்தத்தைக் குறைக்க தற்போதைய முறையை முற்றிலுமாக மாற்றியமைப்பதாகும் என்று பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய கூறினார்.

ஜூலை 26 அன்று இரத்தினபுரி நகர மண்டபத்தில், தேசிய மக்கள் சக்தியின் (NPP) இரத்தினபுரி மாவட்ட மகளிர் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த 'வளமான தேசத்திற்காக பெண்களாக ஒன்றுபடுவோம்' என்ற தலைப்பில் நடைபெற்ற குழு கலந்துரையாடலின் போது அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

தற்போதுள்ள கல்வி முறை, தேர்வு மையப்படுத்தப்பட்ட அணுகுமுறையால், குழந்தைகள் மீது மிகுந்த அழுத்தத்தை ஏற்படுத்துகிறது என்றும், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இருவருக்கும் தேவையற்ற மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது என்றும் பிரதமர் கூறினார். புதிய சீர்திருத்தங்கள் இந்த கட்டமைப்பை மாற்றுவதையும், கல்வியில் கடுமையான போட்டியின் சமூக விளைவுகளைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன என்று அவர் விளக்கினார்.

"நீண்ட காலமாக, எங்கள் அரசியல் இயக்கம் மாணவர்கள், பெற்றோர்கள் அல்லது ஆசிரியர்களைப் பாரப்படுத்தாத கல்வி முறையின் அவசியத்தைப் பற்றிப் பேசி வருகிறது. இந்த சீர்திருத்தங்கள் பாடப்புத்தகங்களை மாற்றுவதற்கு மட்டுமல்ல, நீண்டகால பிரச்சினைகளைச் சரிசெய்யும் நோக்கம் கொண்டவை," என்று அவர் கூறினார்.

அர்த்தமுள்ள மாற்றத்தை ஏற்படுத்தத் தவறிய கடந்த கால அரசாங்கங்களையும் அவர் விமர்சித்தார்.

"அவர்கள் சீர்திருத்தங்களைப் பற்றிப் பேசினாலும், அவர்கள் பெரும்பாலும் தங்கள் சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரல்களைத் தள்ள கல்வியைப் பயன்படுத்தினர். பட்ஜெட்டுகள் குறைக்கப்பட்டன, நிதிச் சுமை பெற்றோருக்கு மாற்றப்பட்டது. ஆசிரியர் பயிற்சி மற்றும் கல்வித் தலைமைத்துவத்தில் முதலீடுகள் புறக்கணிக்கப்பட்டன," என்று அவர் கூறினார்.

பயிற்சி பெற்ற வல்லுநர்கள், உள்கட்டமைப்பு மற்றும் நிதி போன்ற சரியான வளங்கள் இல்லாமல், இந்த முந்தைய முயற்சிகள் ஒருபோதும் உண்மையான முன்னேற்றங்களுக்கு வழிவகுக்கவில்லை என்று பிரதமர் வலியுறுத்தினார்.

தற்போதைய அரசாங்கம் திறந்த பொது உரையாடல் மூலம் அர்த்தமுள்ள சமூக மாற்றத்தில் கவனம் செலுத்துகிறது என்று அவர் மேலும் கூறினார்.

"நாங்கள் கொள்கைகளை மட்டும் மாற்றவில்லை - சமூகத்தில் மனப்பான்மைகளை மாற்றவும் நாங்கள் பணியாற்றி வருகிறோம். இந்த உரையாடலைப் பரப்புவதில் அனைவருக்கும் பங்கு உண்டு," என்று அவர் மேலும் கூறினார். (ஐ)

# மாணவர்களுக்கு இனி இரண்டு இடைவேளை



கொழும்பு, ஜூலை 28

புதிய கல்வி சீர்திருத்தங்களின் கீழ், பாடசாலை நேரங்கள் மற்றும் இடைவேளை நேரங்கள் மாற்றப்பட்டுள்ளன.

அதன்படி, பாடசாலைகள் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை நடைபெறும், மேலும் இரண்டு இடைவேளைகளை வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து பாடசாலை நேரம் ஒரு நாளைக்கு 50 நிமிடங்கள் அதிகரிக்கும் என்பதால், மாணவர்களால் அதைத் தாங்க முடியாது.

எனவே தினமும் காலை 10.10 மணி முதல் காலை 10.30 மணி வரை மற்றும் மதியம் 12.10 மணி முதல் மதியம் 12.20 மணி வரை இரண்டு இடைவேளை வழங்கப்பட்டுள்ளதாக தேசிய கல்வி நிறுவனத்தின் உதவி பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசோக டி சில்வா தெரிவித்தார்.

அத்துடன், வகுப்பு நேர அட்டவணைகள் மாற்றப்பட்டுள்ளன.

அதன்படி, காலை 7.40 முதல் 8.30 மணி வரை, காலை 8.30-9.20 மணி வரை, காலை 9.20 -10.10 மணி வரை, காலை 10.30 -11.20 மணி வரை, காலை 11.20 முதல் மதியம் 12.10 மணி வரை மற்றும் மதியம் 12.20 -1.10 மணி வரை, பிற்பகல் 1.10-2.00 மணி வரை என நேரங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. (ஐ)

# டயர் வெடித்ததில் இருவர் மரணம்



கொழும்பு, ஜூலை 28

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் அங்குனுகொலபெலஸ்ஸ 175 கி.மீ கட்டை அருகில் ஞாயிற்றுக்கிழமை (27) மாலை 5.30 மணியளவில் பயணித்த வேன் டயர் வெடித்து விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெலிகம , தெனிபிட்டிய மற்றும் வரகாபிட்டிய பகுதிகளைச் சேர்ந்த 40 , 60 வயதுடைய நிலுகா மற்றும் ஞானவதி என்ற இரண்டு பெண்கள் விபத்தில் உயிரிழந்தனர்.

மேலும் விபத்தில் காயமடைந்த நால்வர் அங்குணகொலபெலஸ்ஸ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பாக அங்குணகொலபெலஸ்ஸ அதிவேக நெடுஞ்சாலை சோதனைச் சாவடியில் உள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஆப்ரேஷன் சிந்தூர் மீதான விவாதத்தை தொடங்கி வைத்தார் ராஜ்நாத் சிங்



ஆப்ரேஷன் சிந்தூர் மீதான விவாதத்தை ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடங்கி வைத்தார். விவாதத்தின் மீது மக்களவையில் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசி வருகிறார். ஆப்ரேஷன் சிந்தூர் குறித்து மக்களவையில் 16 மணி நேரம் விவாதம் நடைபெறவுள்ளது. பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதல் நடத்தியபோது என்ன நடந்தது என்பது குறித்து ராஜ்நாத் சிங் விளக்கம் அளித்து வருகிறார். அவ்வாறு அவர் பேசுகையில், பாக். பொய் பிரச்சாரம் செய்தது கொல்லப்பட்ட தீவிரவாதிகளுக்கு பாக். மரியாதை செலுத்தியது. இந்தியாவின் நவீன ஏவுகணைகள் மூலம் தீவிரவாதிகளின் முகாம்களை அழித்தோம். பாகிஸ்தான் ஏவிய ட்ரோன்களை எஸ்-400 ஏவுகணைகள் மூலம் இடைமறித்து அழித்தோம். ஆப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் இந்திய விமானப்படையின் பலத்தை உலகம் உணர்ந்தது. பாகிஸ்தானின் அனைத்து தாக்குதல்களையும் இந்திய ராணுவம் முறியடித்தது. பாக். தாக்குதல் நடத்தினால் எந்த நேரத்திலும் பதிலடி தர தயார் என்று ராஜ்நாத் சிங் பேசினார். (ஐ)

# பொலிஸார் நடத்திய அதிரடி சோதனையில் 5,250 கஞ்சா சாக்லேட் பறிமுதல்



கூடுவாஞ்சேரியில் பொலிஸார் நடத்திய அதிரடி சோதனையில் 5,250 கஞ்சா சாக்லேட் பறிமுதல் செய்யப்பட்டது என தாம்பரம் காவல் ஆணையர் அபின் தினேஷ் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக தாம்பரம் காவல் ஆணையர் பேசுகையில் கூறியதாவது மாணவர்கள் தங்கியுள்ள பகுதிகள், வீடுகள், கடைகள், ஓட்டல்களில் 100 போலீசார் அதிரடி சோதனை நடத்தியுள்ளனர். பொலிஸார சோதனையில் கஞ்சா சாக்லேட்டுகள், குட்கா உள்ளிட்டவற்றை போலீசார் கைப்பற்றினர்.

பறிமுதல் செய்வதோடு மட்டுமன்றி மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். கல்வி நிறுவனங்களுக்கு தொடர்புகொண்டு மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் தெரிவித்துள்ளோம். குறிப்பிட்ட தகவல்கள் அடிப்படையில் சோதனை நடத்தப்படுவது தொடரும். துணை ஆணையர், உதவி ஆணையர் தலைமையில் சோதனை நடத்தப்பட்டது. 5 அடுக்குமாடி குடியிருப்புகள், பெட்டிக்கடைகளில் சோதனை நடத்தப்பட்டது.

நடப்பாண்டியில் இதுவரை 1,500 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு அளிக்கப்பட்டது. 5,250 கஞ்சா சாக்லேட் வைத்திருந்த ஒருவர் கைது 7 பேரிடம் விசாரணை நடைபெற்று வருகிறது. போதைப்பொருள் பயன்பாடு குறித்து தகவல் கிடைத்தால் கல்விநிறுவனங்களில் சோதனை நடத்தப்படும். கல்வி நிறுவனங்களுக்கு தொடர்புகொண்டு மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் தெரிவித்துள்ளோம். போதைப்பொருள் நடமாட்டத்தை முற்றிலுமாக ஒழிக்க உறுதிபூண்டுள்ளோம் என்று கூறியுள்ளார். (ஐ)




# தூத்துக்குடியில் ஐடி ஊழியர் கொலை: தம்பதி மீது வழக்குப்பதிவு

தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த கவின் திருநெல்வேலிக்கு நேற்று வந்து இருந்த நிலையில் நெல்லை சேர்ந்த சுர்ஜித் ஆய்வாளர்களின் மகன் என்பவரால் படுகொலை செய்யப்பட்டுயுள்ளார் . அவர் மீது நன்கு பிரிவுகளின் கொலை வன்கொடுமை உள்ளிட்ட நான்கு பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யபட்டுள்ளது

இந்த கொலை சம்பவம் 22 வயது ஆன சுர்ஜித் அந்த 25 வயது இளைஞரை கொலை செய்து இருக்கிறார் பெற்றோர்களின் உதவி ஆய்வாளர்களாக பனி ஆற்றக்கூடிய பெற்றோர்கள் சரவணாகுமார், கிருஷ்ணவேணி இவர்களின் துண்டுதலின் பெயரில் கொலை சம்பவத்தை அரங்கேற்றியதாக கவின்னுடைய பெற்றோர் அவருடைய தாய் செல்வி பாளைங்கோட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளர் .

இது தொடர்பாக தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது.

ஜாதி பாகுபாடு காரணமாக இந்த கொலை சம்பவம் நடைபெற்றதாக இந்த கோணத்திலும் விசாரணை நடைபெற்று வருகிறது. பாளைங்கோட்டை உதவி ஆணையாளர் இந்த சம்பவத்தில் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கவேண்டிய உதவி ஆய்வாளர்களே தங்களது மகன் மூலமாக இந்த கொலை சம்பவத்தை அரங்கேற்றினார்கள்

இது தொடர்பாக கிருஷ்ணா சாமி ஜோன் பாண்டியன் உள்ளிட்ட அவர்கள் சமூகத்தை சார்ந்த தலைவர்கள் கண்ட அறிக்கை மூலமாகவும் விடீயோக்கள் மூலமாக கண்டனத்தை பதிவு செய்து இருக்கிறார்கள். காதலிக்க மறுத்த பிறகும் கட்டாய படுத்தியதாக சுர்ஜித் என்ற இளைஞர் கூறியிருக்கக்கூடிய நிலையில் அது தொடர்பாக முன்கூட்டிய 6 மாதமாக காதலிக்க மறுத்த நிலையிலும் தொடர்ந்து அவர் டார்ச்சர் செய்து வந்தார் என வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளர்.

இந்த நிலையில் உதவி ஆய்வாளர்களாக சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டிய அவர்கள் இந்த கட்ட பஞ்சாயத்து நடவடிக்கைக்கு துணைபோனார்களா என்ற கோணத்திலும் விசாரணை நடைபெற்று வருகிறது. அவர்கள் மீதும் வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துருகிறது.

(ஐ)

# அவமதிப்பு வழக்கு வழக்கறிஞர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்!

வழக்கறிஞர் வாஞ்சிநாதன் மீது உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி ஜி. ஆர். சுவாமிநாதன் தொடுத்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கை கைவிட வேண்டும் என வலியுறுத்தி விழுப்புரம் மாவட்ட நீதிமன்றம் முன்பு வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உயர்நீதிமன்ற நீதிபதி ஜி. ஆர். சுவாமிநாதனை கண்டித்து தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். வழக்கறிஞர் வாஞ்சிநாதனுக்கு எதிரான அவமதிப்பு வழக்கை வாபஸ் பெற வேண்டுமென வலியுறுத்தி வருகின்றனர்.

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி ஜி. ஆர். சுவாமிநாதன், சாதி - மத பாகுபாடுகளுடன் நடந்துகொள்கிறார் என சமூக செயற்பட்டாளரும், வழக்கறிஞருமான வாஞ்சிநாதன், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு புகார் மனு ஒன்றை அனுப்பியிருந்தார். அதில் நீதிபதி ஜி. ஆர். சுவாமிநாதன் எந்தெந்த வழக்குகளில் எல்லாம் ஜாதி, மத அடிப்படையில் அவர் தீர்ப்பளித்திருக்கிறார் என்கிற விவரங்களையும் இணைத்து அனுப்பியிருந்தார். இந்நிலையில், உச்சநீதிமன்ற நீதிபதிக்கு தன் மீது புகார் அனுப்பியதால் அதிருப்தியில் இருந்த நீதிபதி சுவாமிநாதன், வழக்கறிஞர் வாஞ்சிநாதன் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு இன்று (ஜுலை 28) நீதிபதிகள் சுவாமிநாதன், ராஜசேகர் அமர்வு முன்பு விராணைக்கு வருகிறது.

அப்போது வழக்கறிஞர் வாஞ்சிநாதமும் நேரில் ஆஜராக உத்தரவிடப்பட்டிருந்தது. நீதிபதி ஜி. ஆர். சுவாமிநாதனின் இந்த நடவடிக்கைக்கு தமிழ்நாடு -புதுச்சேரி வழக்கறிஞர்கள் கூட்டமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. நீதிபதியின் இந்த செயலுக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், ஓய்வுபெற்ற நீதிபதிகளும் கடும் எதிர்ப்பை பதிவு செய்து வருகின்றனர்.

இதனைத்தொடர்ந்து தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். வழக்கறிஞர் வாஞ்சிநாதனுக்கு எதிரான அவமதிப்பு வழக்கை வாபஸ் பெற வேண்டுமென வலியுறுத்தி வருகின்றனர். (ஐ)









# வாழ்க்கை ஒரு போர்க்களம்!

விவாகரத்துகளுக்கு என்னென்ன காரணங்கள் என்று ஒரு நீண்ட பட்டியல் எழுதினால் அதில் முதலாவதாக இருப்பது கணவன், மனைவிக்கு இடையே ஏற்படும் பிரச்சினைகளில் குடும்பத்தவர் தலையிடுவதாகதான் இருக்கும். பெரும்பாலும் பெற்றோரால் பார்த்து நிச்சயிக்கப்படும் திருமணங்கள்தாம் அதிகம் என்பதால், ஆரம்ப காலகட்டங்களில் கணவன் மனைவி இருவருக்கு இடையே புரிதல் அவ்வளவாக இருக்காது. திருமணமாகி சில ஆண்டுகள் சம்மந்தப்பட்ட கணவன், மனைவி பிரச்சினையில் பெண்ணின் குடும்பமோ பையனின் குடும்பமோ தலையிடாமல் அவர்களாக ஒரு முடிவுக்கு வரட்டும் என்று விட்டுவிட்டாலே பல பிரச்சினைகள் சரியாகிவிடும்.

ஆனால், நமது சமூக அமைப்பாகட்டும், குடும்ப அமைப்பாகட்டும் பெரும்பாலும் கட்டப் பஞ்சாயத்து செய்யும் இடமாக இருப்பதால்தான் பிரச்சினைக்குத் தீர்வாக விவாகரத்து எதிர்பார்த்து குடும்ப நல நீதிமன்றம் செல்கிறது. குடும்ப உறுப்பினர்கள் தலையீட்டால் கணவன் மனைவிக்குள் வரும் விரிசல் ஒருபுறம் என்றால், பெற்றோர் பார்த்து வைக்கும் பல திருமணங்களில் இருவருக்கும் பரஸ்பரம் புரிதல் இல்லாமல், திருமணமான புதிதில் பரஸ்பர ஈர்ப்பில், ஒருவரை இன்னொருவர் கவர, தங்களால் முடியாத செயல்களைக்கூடச் சிரித்த முகத்தோடு வலிய செய்துவிட்டு, பின்னர் தொடர முடியாமல், அதனால் எழும் சிக்கல்களும் குடும்ப உறவில் விரிசலுக்கு காரணமாகி விடுகின்றன.

பரஸ்பரம் காதலித்து திருமணம் செய்துகொண்டால் பிரச்சினைகளே இருக்காதா எனக் கேட்டால், வாய்ப்பு குறைவு. திருமணத்திற்கு முன் காதலிக்கும் போதே ஒருவரை இன்னொருவர் புரிந்துகொள்ள அதிக வாய்ப்பு இருப்பதுடன், இருவரும் கலந்து பேசி ஒத்து வந்தால் திருமணம் செய்து கொள்ளலாம். இல்லை பிரிந்துவிடலாம். காதல் பற்றிய பத்தாம்பசலித்தனமான பல கருத்துகளை மூட்டை கட்டிவிட்டு, ஆணும் பெண்ணும் யதார்த்த வாழ்க்கையில் சந்திக்க இருப்பதையும், அதை இணைந்து எப்படிக் கடக்க வேண்டும் என்பதையும் சம்மந்தப்பட்ட இருவர் மட்டுமே தெளிவுப்படுத்திக்கொண்டு, அதன் பின் வாழ்க்கையைத் தொடங்குவது மட்டுமே இனிவரும் காலத்தில் திருமண வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்த உதவும்.

இன்று பெரும்பாலும் தனிக்குடித்தனம் என்று ஆகிவிட்ட நிலையில், ஒரு பெண் வேலைக்குச் சென்றாலும் சரி, செல்லவில்லை என்றாலும் சரி குழந்தைப்பேறு, குழந்தை வளர்ப்பு என்பதை கணவன், மனைவி இருவரும் உட்கார்ந்து பேசி, விளைவுகள் குறித்து ஆலோசித்து, அதன்பின் குழந்தை பெற்றுக்கொள்வதைப் பற்றி முடிவெடுப்பது நன்றாக இருக்கும்.

'என்ன கல்யாணமாகி ஒரு வருசம் ஆகிவிட்டது, இன்னும் குழந்தை இல்லையா' என்று கேட்பதற்காகவும், குழந்தை பெற்றுக் கொள்ளவில்லை என்றால் தன்னைப் பிறர் கேலியோ கிண்டலோ செய்யக்கூடும், அல்லது தன்னுடன் திருமணமானவர்களுக்கு குழந்தை பிறந்துவிட்டது, அதனால் விரைவில் குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றோ குழந்தை பெற்றுக்கொள்ளும் பலர் தங்கள் வாழ்க்கையைக் கடும் சிக்கலுக்குள் தள்ளுகின்றனர். குழந்தை பெற்று வளர்ப்பது என்பது கடமை அல்ல, அது மிகப்பெரிய பொறுப்பு.

அதே போல என் அம்மா பார்த்துக்கொள்வார், மாமியார் பார்த்துக் கொள்வார், உறவினர்கள் இருக்கிறார்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று பிறரை நம்பி குழந்தை பெற்றுக்கொள்வதும் கூட அபத்தம்தான். அவர்கள் குழந்தை வளர்ப்பில் துணை புரியலாமே தவிர, முழுப் பொறுப்பையும் ஏற்க முடியாது, கணவன், மனைவி இருவரும் குழந்தை வளர்ப்புக்குத் தங்களைத் தயார்படுத்திக் கொண்டு, விட்டுக் கொடுக்க வேண்டியவை பற்றித் தீர ஆலோசித்து, அதன் பின் குழந்தை பெற்றுக்கொள்வது பற்றி யோசித்தாலே குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே பிரச்சினை இருக்காது.



**பரஸ்பரம் காதலித்து திருமணம் செய்து கொண்டால் பிரச்சினைகளே இருக்காதா எனக் கேட்டால், வாய்ப்பு குறைவு. திருமணத்திற்கு முன் காதலிக்கும் போதே ஒருவரை இன்னொருவர் புரிந்துகொள்ள அதிக வாய்ப்பு இருப்பதுடன். இருவரும் கலந்து பேசி ஒத்து வந்தால் திருமணம் செய்து கொள்ளலாம். இல்லை பிரிந்துவிடலாம். காதல் பற்றிய பத்தாம்பசலித்தனமான பல கருத்துகளை மூட்டை கட்டிவிட்டு. ஆணும் பெண்ணும் யதார்த்த வாழ்க்கையில் சந்திக்க இருப்ப தையும், அதை இணைந்து எப்படிக் கடக்க வேண்டும் என்பதையும் சம்மந்தப்பட்ட இருவர் மட்டுமே தெளிவுப்படுத் திக்கொண்டு. அதன் பின் வாழ்க்கையைத் தொடங்குவது மட்டுமே இனிவரும் காலத்தில் திருமண வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்த உதவும்.**

# காசாவில் இந்த மாதத்தில் மட்டும் பட்டினியால் 56 பேர் உயிரிழப்பு!



காசாவில் இம்மாதத்தில் மட்டும் பட்டினியால் 56 பேர் உயிரிழந்துள்ளனர். பச்சிளம் குழந்தைகளுக்கு பால் இல்லாததால் தண்ணீரை மட்டுமே குடித்து உயிர் வாழும் அவல நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளனர். இதில் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ள பெரும்பாலான குழந்தைகள், தாங்கள் பிறக்கும்போது இருந்த எடையை விட தற்போது எடை குறைவாக உள்ளனர். (ஐ)

# இஸ்ரேல் துறைமுகங்களுடன் தொடர்பு வைத்துள்ள நிறுவனங்களுக்குச் சொந்தமான கப்பல்களையும் தாக்குவோம்



இஸ்ரேல் துறைமுகங்களுடன் தொடர்பு வைத்துள்ள நிறுவனங்களுக்குச் சொந்தமான அனைத்து கப்பல்களையும் தாக்குவோம் என்று ஏமனில் செயல்படும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அமைப்பு மிரட்டல் விடுத்துள்ளது. இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான மோதல் தீவிரமடைந்துள்ள நிலையில், ஏமன் நாட்டின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஈரானுக்கு ஆதரவாக இஸ்ரேல் மீது தாக்குதல் மேற்கொண்டுவருகின்றனர்.

இந்த நிலையில் ஹவுதி அமைப்பின் செய்தித் தொடர்பாளர் வெளியிட்டுள்ள வீடியோவில்

இஸ்ரேல் துறைமுகங்களுடன் தொடர்பு வைத்துள்ள நிறுவனங்களுக்குச் சொந்தமான அனைத்து கப்பல்களையும் தாக்குவோம். கப்பல்கள் தாக்கப்படாமல் இருக்க வேண்டுமெனில், காசாவில் தாக்குதல் நடத்தும் இஸ்ரேலுக்கு எதிராக உலக நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். காசாவில் தாக்குதல் நடத்துவதை இஸ்ரேல் நிறுத்திக் கொண்டால், உடனடியாக தங்கள் நடவடிக்கையை நிறுத்திக் கொள்வதாகவும். என அவர் தெரிவித்துள்ளார்.



# ஜெர்மனியில் ரயில் தடம்புரண்ட விபத்தில் 3 பேர் உயிரிழப்பு!

ஜெர்மனியில் ரயில் தடம்புரண்ட விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். ரைட்லிஜென் அருகே வனப்பகுதியில் ரயில் சென்று கொண்டிருந்தபோது தடம் புரண்டது. இந்த விபத்தில் மேலும் சில பயணிகள் காயம் அடைந்துள்ளனர்.

தென்கிழக்கு பேடன்-வூர்ட்டம்பேர்க்கில் நடந்த ரயில் விபத்தில் பலர் கொல்லப்பட்டனர் மற்றும் பலர் காயமடைந்தனர். பிராந்திய ரயில் தடம் புரண்டது. முன்பு அந்தப் பகுதியில் ஒரு புயல் தாக்கியது.

போலீசார் மேலும் விவரங்களை வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கையின்படி, நேற்று மாலை பிபெராச் மாவட்டத்தில் உள்ள ரீட்லிங்கன் அருகே நடந்த ரயில் விபத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 41 பேர் காயமடைந்தனர், அவர்களில் பலர் படுகாயமடைந்தனர்.

அந்த அறிக்கையின்படி, விபத்துக்கான காரணம் குறித்து ஆரம்ப சந்தேகங்கள் உள்ளன. விபத்து நடந்த பகுதியில் பெய்த கனமழை காரணமாக கழிவுநீர் குழாய் நிரம்பி வழிந்திருக்கலாம். இந்த நீர் தண்டவாளத்திற்கு அருகிலுள்ள கரை பகுதியில் நிலச்சரிவை ஏற்படுத்தியது. இதனால் பிராந்திய எக்ஸ்பிரஸ் ரயில் தண்டவாளத்தில் இருந்து தடம் புரண்டது. (ஐ)

# ரஷியா-வடகொரியா இடையே நேரடி விமான சேவை தொடக்கம்



கடந்த மாதம் ரஷிய தலைநகர் மாஸ்கோவில் இருந்து வடகொரியா தலைநகர் பியாங்க்யாங் இடையே ரெயில் சேவை தொடங்கப்பட்டது. உக்ரைன்-ரஷியா இடையே 2022-ம் ஆண்டு போர் தொடங்கியது. இந்த போரில் உக்ரைனுக்கு ஆதரவாக ஐரோப்பிய நாடுகள் செயல்படுகின்றன. அதேபோல் ரஷியாவுக்கு அதன் நட்பு நாடான வடகொரியா ராணுவ உதவியை வழங்கி வருகிறது. எனவே இரு நாடுகள் இடையேயான உறவில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளது.

இதற்கிடையே கடந்த மாதம் ரஷிய தலைநகர் மாஸ்கோவில் இருந்து வடகொரியா தலைநகர் பியாங்க்யாங் இடையே ரயில் சேவை தொடங்கப்பட்டது. ஆனால் இதன் பயண நேரம் சுமார் 10 நாட்கள் ஆகும். இதனால் நேரடி விமான சேவை தொடங்க இரு நாடுகளும் நடவடிக்கை எடுத்து வந்தன. அந்தவகையில் தற்போது மாஸ்கோ-பியாங்க்யாங் இடையே நேரடி விமான சேவை நேற்று தொடங்கியது. இந்த விமானம் வாரத்துக்கு 2 முறை இயங்கும் என ரஷிய விமான போக்குவரத்து நிறுவனமான ரோசாவியாட்சியா தெரிவித்துள்ளது. (ஐ)

# அமெரிக்க அதிபர் ட்ரம்பின் முடிவால் நாசாவில் 3,900 ஊழியர்கள் வேலை இழக்கும் அபாயம்




அரசுப்பணியாளர்கள் எண்ணிக்கையை குறைக்க அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எடுத்த முடிவால், நாசாவில் 3,900 ஊழியர்கள் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ட்ரம்பின் முடிவால் பல்வேறு நிறுவனங்களில் ஆட்குறைப்பு நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. இதற்கு எதிராக நாசா ஊழியர்கள் போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

## நல்லூரான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து அங்கிருந்து சிறிய தேர் ஒன்றில் கொடிச்சீலை பருத்தித்துறை வீதி ஊடாக எடுத்துச் செல்லப்பட்டு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை வந்தடைந்து. கொடிச்சீலை நல்லூர் ஆலயப் பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

நல்லூர் ஆலய மகோற்சவக் கொடியேற்றம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்களுக்கு மகோற்சவ திருவிழாக்கள் இடம்பெறும்.

மகோற்சவ திருவிழாக்களின் 10ஆம் திருவிழாவான மஞ்சத் திருவிழா எதிர்வரும் 7ஆம் திகதியும் , 22ஆம் திருவிழாவான மாம்பழத் திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் 19ஆம் திகதியும் , 24ஆம் திருவிழாவான தேர்த் திருவிழா ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி காலையும், மறுநாள் 22ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று, மாலை கொடியிறக்கம் இடம்பெற்று, மகோற்சவ திருவிழாக்கள் நிறைவு பெறும்.

## மாவையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தந்தை செல்வா நற்பணி மன்றமும் வட்டுக்கோட்டை பகுதி மக்களும் ,ந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு, அன்னாரின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நினைவுப் பேருரைகள் ஆற்றப்பட்டன. பின்னர் குடும்பத்தினருக்கான நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டதுடன் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

,ந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், மறைந்த மாவை சோ.சேனாதிராஜாவின் புதல்வன் மா.கலையமுதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ்பிரேமச்சந்திரன், ஈ.சரவணபவன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான சபா. குகதாஸ், திரு.கஜதீபன், யாழ். மாநகர சபையின் உறுப்பினர் ப.தர்ஷானந், தந்தை செல்வாவின் பேரன் ,ளங்கோவன், வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் திருமதி ஐ.நாகரஞ்சினி, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் சர்வேஸ்வரன், ,லங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள், தந்தை செல்வா நற்பணி மன்றத்தினர், போராளிகள், நலன்புரிச் சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## மாவை சேனாதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மனம் அவரிடம் இருந்தது. அவர் இல்லாத இந்த ஆறு மாதங்களில் அவரது பலம் என்ன, அவரது பலவீனம் என்ன என இன்று பலர் அறிவதற்குத் தலைப்பட்டு இருக்கின்றார்கள்." - என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

யாழ். சங்கானை கலாசார மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மாவை சேனாதிராஜாவின் ஆறாவது மாத நினைவுப் பகிர்வு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

"2001 ஆம் ஆண்டில் இருந்து 2009 ஆம் ஆண்டு வரை தமிழீழ விடுதலைப்புலிகள் ஏற்படுத்தியிருந்த ஒற்றுமையை, 2010 இல் இருந்து அதற்குப் பின்னர் ஓரளவுக்கு பேணியதில் மாவை சேனாதிராஜாவுக்கு பெரும் பங்கு உண்டு.

என்னை அரசியலுக்குள் கொண்டு வந்ததும் அண்ணன் மாவை சேனாதிராஜாவே. அந்த நேரம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக இருந்த இராசநாயகத்தை அரசியலுக்குள் கொண்டு வர முயற்சித்தோம். சில

## கறுப்பு ஜூலை நினைவேந்தல்– தீப்பந்தம் ஏந்தி நெல்லியடியில் போராட்டம்!

*கறுப்பு ஜூலை நினைவேந்தலை முன்னிட்டு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் யாழ்.வடமராட்சி நெல்லியடி பேருந்து நிலையம் முன்பாக தீப்பந்தப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.*

*குறித்த தீப்பந்தப் போராட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணி அளவில் இடம்பெற்றது.*

*தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் தலைமையில் இடம்பெற்ற தீப்பந்தப் பேராட்டத்தில் மாநகர சபை மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்கள் ,உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள் எனப்* பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாமலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னிலையாகத் தவறியமையால், அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் இன்று இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ஊவா மாகாணத்தின் பிரதம செயலாளராக திருமதி பீ.ஏ.ஜீ. பெர்னாண்டோ நியமனம்!

ஊவா மாகாணத்தின் பிரதம செயலாளராக திருமதி பீ.ஏ.ஜீ. பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவால் இந்த நியமஜனம் வழங்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க இன்று (28) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து அவரிடம் கையளித்தார்.

இலங்கை நிர்வாக சேவையின் சிறப்பு தர அதிகாரியான திருமதி பீ.ஏ.ஜீ பெர்னாண்டோ, இதற்கு முன்னர் மேல் மாகாணக் கல்வி, கலாசார மற்றும் கலை நடவடிக்கைகள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அமைச்சின் செயலாளராகவும் கடமையாற்றி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேசிய மக்கள் சக்தி உறுப்பினரை குறி வைத்து துப்பாக்கி சூடு– சந்தேகநபர் கைது!

வெலிகம பிரதேச சபையின் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் தாரக நாணயக்காரவின் வீட்டை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடாத்திய சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

33 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை பகுதியில் வைத்து குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 16ஆம் திகதி அதிகாலையில், மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர் தாரக நாணயக்காரவின் வீட்டை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றிருந்தனர்.

வீட்டின் வாயிலின் மீது துப்பாக்கிச் சூடு நடாத்தப்பட்டமையால் சம்பவத்தில் எந்தவொரு நபருக்கும் காயம் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பதில் அமைச்சர்கள் நால்வர் நியமனம்!

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மாலைதீவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள காரணத்தால், 4 அமைச்சுகளுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் கீழ் உள்ள டிஜிட்டல் பொருளாதார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கும், அமைச்சர் விஜித ஹேரத்தின் கீழ் உள்ள வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சிற்கும் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சரான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பதில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன, டிஜிட்டல் பொருளாதார பதில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர பாதுகாப்பு பதில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பதில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவின் வரி வீதத்தை மேலும் குறைக்க தொடர் கலந்துரையாடல்!

அமெரிக்காவால் இலங்கையின் ஏற்றுமதி பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியை குறைப்பது தொடர்பான மற்றொரு கலந்துரையாடல் இந்த வாரம் நடைபெறவுள்ளது.

குறித்த கலந்துரையாடல் நிகழ்நிலை ஊடாக, நிதியமைச்சின் அதிகாரிகள் மற்றும் அமெரிக்க வர்த்தக பிரதிநிதிகளிடையே நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 01ஆம் திகதிக்கு முன்னர் கலந்துரையாடல்களில் முன்னேற்றம் ஏற்படும் என இலங்கை பிரதிநிதிகள் குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவால் விதிக்கப்பட்டுள்ள பரஸ்பர வரியை குறைப்பது தொடர்பாக ஜனாதிபதிக்கும் அமெரிக்க வர்த்தக பிரதிநிதி அலுவலகத்தின் தூதுவருக்கும் இடையே நிகழ்நிலை ஊடாக கடந்த 25ஆம் திகதி கலந்துரையாடல் இடம்பெற்றது.

இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு 30 வீத தீர்வை வரியை அமெரிக்கா அறிவித்தது.

இந்த வரி விதிப்பு ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் நடைமுறை வரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரி வீதத்தை மேலும் குறைக்க அரசாங்கம், அமெரிக்காவுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

## மருதானை பொலிஸ் நிலைய கான்ஸ்டபிள்கள் மூவர் பணி இடைநீக்கம்!

மருதானை பொலிஸ் நிலையத்தில் பணி புரிந்துவந்த பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மூவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல்காரருடன் தொடர்பைப் பேணிய குற்றச்சாட்டில் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 23 ஆம் திகதி கொழும்பு மத்திய குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை சோதனை செய்தபோது, அவர் வைத்திருந்த கையடக்க தொலைபேசியில் பொலிஸ் அதிகாரிகளின் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் குரல் பதிவுகள் இருந்துள்ளன.

இதன் காரணமாக போதைப்பொருள் கடத்தல்காரருக்கு உதவிய குற்றச்சாட்டில் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்களும் 22, 30 மற்றும் 32 வயதுக்குட்பட்டவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கொழும்பு மத்திய குற்றத் தடுப்புப் பிரிவினர் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியரின் சம்பள உயர்வு தொடர்பில் அரசிடம் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை!

அரசாங்கம் பாடசாலை நேரத்தை 30 நிமிடங்கள் நீட்டிக்க நடவடிக்கை எடுத்தால் அதற்கேற்ப சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்று இலங்கை சுயாதீன ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் சந்திமால் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

அரசாங்கம் பாடசாலை நேரத்தை 30 நிமிடங்கள் நீட்டிக்க நடவடிக்கை எடுத்தால், மாதாந்திர சேவைக் காலமான 20 நாட்களில் 10 மேலதிக சேவை நேரங்களைச் சேர்க்கும்.

இது ஆசிரியர்களின் சம்பளத்தை நேரடியாகப் பாதிக்கும் ஒரு போக்கு.

இது தொடர்பில் முன்மொழியப்பட்ட திட்டம் கற்பித்தல் நேரத்தை நீட்டித்தாலும், ஆசிரியர்களின் சம்பளம் நியாயமான முறையில் அதிகரிக்கப்பட வேண்டும்.

கல்வி அமைச்சகம் ஆசிரியர்களின் தொழிற்சங்கங்களுடன் கலந்தாலோசித்து அதை செயல்படுத்த வேண்டும்- எனத் தெரிவித்தார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.07.2025 வெளியிடப்பெற்றது.